

முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற பிப்ரவரி 6 மற்றும் 7ஆம் தேதிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நெல்லை மாவட்டத்திற்கு வருகை தருவதை முன்னிட்டு நெல்லை மத்திய மற்றும் கிழக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பாளை கே.டி.சி.நகர் மாதா மாளிகையில் மாவட்ட அவைத் தலைவர்கள் ம.கிரகாம்பெல்,வி.கே.முருகன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே. என்.நேரு பங்கேற்று ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன் ஞானதிரவியம், சித்திக், பேச்சிப் பாண்டியன், லெட்சுமணன், தொகுதி பார்வையாளர்கள் வசந்தம் ஜெயக்குமார்(பாளை), முத்துச்செல்வி(நெல்லை), மாநில நிர்வாகிகள் ராஜம்ஜான், மாலை ராஜா, ஆவின்ஆறுமுகம், விஜிலாசத்யானந்த், கணேஷ் குமார்ஆதித்தன், ராஜவர்மன், மேயர்.ராமகிருஷ்ணன், துணை மேயர்.ராஜ், முன்னாள் துணை மேயர் முத்துராமலிங்கம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், 27.01.2025 அன்று தலைமைச் செயலகத்தில் இந்திய அயலகப் பணி (I.F.S.) இப்பிரிவு சார்ந்த அலுவலர்கள் கோபில்லா கிருஷ்ணா ஸ்ரீவத்சவ், ஜி.கிருஷ்ணகுமார், செல்வி பி.அனுஜா, செல்வி ஜி.சத்யநந்தி, ஜி.ஹரிசங்கர், பி.வி. அப்துல் பசல், கோகுல் கிருஷ்ணா ஆகியோருக்கு மரக்கன்றுகளை வழங்கினார். இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பி. அமுதா, மனிதவள மேலாண்மைத் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு முழுவதும் அரசுத் தொடக்கப் பள்ளிகளில்

# ஸ்மார்ட் வகுப்பறைகளை நிறுவும் பணி முடிந்தது!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தகவல்!



சென்னை, ஜன. 29 -

தமிழகம் முழுவதும் 22,931 அரசுத் தொடக்கப் பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறை அமைக்கும் பணி முடிவடைந்துள்ளதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள் ளார். அரசுப் பள்ளி மாணவ - மாணவியருக்கு தொழில் நுட்பத்துடன் கூடிய கற்றல் சூழலை உருவாக்க தமிழ்நாடு முழுவதும் உள்ள 22,931 அரசுத் தொடக்கப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் (ஸ்மார்ட் கிளாஸ்) அமைக்கும் பணியை கடந்த ஜூன் 14ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக தொடக்கப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் அமைக்கும் பணி முடிந்துள்ளது.

இறுதியாக நடந்த சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் அரசு மேனிலைப் பள்ளியில் முடிந்த இந்த ஸ்மார்ட் வகுப்பறை நிறுவும் பணியை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டார்.

அப்போது அவர் கூறியதாவது: அரசுத் தொடக்கப் பள்ளிகளில் படிக்கும் 11 லட்சத்து 76,452 மாணவ - மாணவியர் பயனடையும் வகையில் ரூ.455 கோடி மதிப்பில் 22931 திறன்மிகு வகுப்பறைகள் நிறுவப்பட்டுள்ளன. அதேபோல அரசுப் பள்ளிகளில் 8209 உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் ரூ.519 கோடியில் அமைக்கும் பணியும் முடிய உள்ளது. இந்த இரண்டு திட்டங்களும், முழுமை அடையும் போது, 43 லட்சத்து 89 ஆயிரம் மாணவ - மாணவியர் பயன் பெறுவர்.

மூன்றரை ஆண்டில் நாம் கல்வித்துறையில் நிறைய செய்துள்ளோம். தமிழ்நாட்டின் கல்வித் தரம் குறைந்துள்ளதாக ஆளுநர் தெரிவிப்பது கண்டனத்துக்குரியது. அவர் நாளொரு மேனியும் தமிழ் நாட்டைப் பற்றி ஏதாவது கூறிவருகிறார். ஒரு நாள் புகழ்கிறார். மறுநாள் எதிர்க்கிறார். மேலும், தேசிய கீதம் எப்போது பாடப்பட வேண்டும் என்று கூடத் தெரியாத நிலையில் இருக்கிறார். தமிழக கல்வித் தரம் பற்றி அவர் கூறுவது கண்டனத்துக்குரியது. ஆளுநர் கூறுவது என்னவென்றால், மாணவர்களுக்கு கூட்டல் கழித்தல் கணக்கு தெரியவில்லை என்கிறார். இது ஆசிரியர்களையும், மாணவர்களின் மனநிலையில் தாக்கத்தையும் ஏற்படுத்தும் செயல் ஆகும். குற்றம் சாட்டுவது போல சொல்கிறார். இது தவறு, எங்கள் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம். அரசுப் பள்ளிகளில் 2014ம் ஆண்டுக்கும் 2024ம் ஆண்டுக்கும் ஒப்பிடும்போது இடைநிற்றல் குறை ந்துள்ளது. மாணவர்களுக்கு மன அழுத்தம் இல்லாமல் புதிய திட்டங்களைக் கொண்டு வந்துள்ளோம்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

### மனுக் கொடுக்க வந்த பெண்ணுக்கு குழந்தை கொடுத்த “யார் அந்த சார்?”

# அ.தி.மு.க. “சார்” களை மறந்து விட்டீரா பழனிசாமி?

## போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கடும் தாக்கு!

சென்னை,ஜன.29-

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு பதிலளித்து போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை பெரம்பூரை சேர்ந்த பள்ளி சிறுமி தனது தோழியின் இல்ல விழாவிற்கு செல்வதாக கூறி சென்றவர் வீடு திரும்பவில்லை என்ற புகாரின் அடிபடையில் உடனடியாக வழக்கு பதிந்து தேடுதல் வேட்டையை துரிதப் படுத்தினர் காவல்துறையினர். மாணவியின் செல்போன் எண்ணை ஆய்வு செய்து அவரின் இருப்பிடத்தை கண்டறிந்த காவல்துறையினர் அங்கு சென்று சிறுமியை மீட்டுள்ளனர். மேலும் அவரோடு இருந்த இரண்டு பள்ளி சிறுமிகளையும் மீட்டுள்ளனர். மூன்று சிறுமிகளையும் காதலிப்பதாக கூறி அழைத்து சென்று பாலியல் வன்கொடுமையில் ஈடுபடுத்தியது விசாரணையில் தெரியவந்ததை அடுத்து குற்றவாளிகள் அனைவரையும் POCSO சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர் காவல்துறையினர். மேற்கொண்டு இவ்வழக்கு தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது.

புகார் பெறப்பட்ட உடனே விரைவாக செயலாற்றி பள்ளி மாணவிகளை கண்டறிந்து குற்றவாளிகளை கைது செய்துள்ளது தமிழ்நாடு காவல்துறை. முதலமைச்சரின் வழிகாட்டுதல் படி பெண்கள் தொடர்பான புகார்களுக்கு கடந்த அ.தி.மு.க. ஆட்சியை போன்று அலட்சியமாக இல்லாமல் தீவிரமாக செயலாற்றி வருகிறது தமிழ்நாடு காவல்துறை. மேலும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு விரைந்து நீதி கிடைக்கும் வகையில் குற்றத்தின் மீதான விசாரணையை வேகப் படுத்தி குற்றவாளி களுக்கு விரைவாக தண்டனையை பெற்றுக்கொடுத்தும் வருகிறது திராவிட மாடல் ஆட்சி.

விரைவாக நடவடிக்கை எடுத்துவிட்டார்களே என்ற விரக்தியிலும் தனக்கு அரசியல் ஆதாயம் கிடைக்க வேண்டும் என்ற ஆர்வத்திலும் அலையும் எடப்பாடி பழனிசாமி வழக்கம் போல அரசை குறை கூறி அவதூறு பதிவு போட்டுள்ளார்.

“சார்”களை காப்பாற்றுவதில் கைதேர்ந்தவரான பழனிசாமிக்கு அ.தி.மு.க.வின்“சார்” களை நினைவிருக்கிறதா? அண்ணா நகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதான அ.தி.மு.க.வை சேர்ந்த 103-வது வட்டச்செயலாளர் சுதாகர் “சார் யார்” என மறந்து விட்டீரா பழனிசாமி.? பொள்ளாச்சி பாலியல் வன்



கொடுமை வழக்கில் கைதான அ.தி.மு.க.வின் பொள்ளாச்சி நகர மாணவரணிச் செயலாளர் அருளானந்தம் “சார் யார்” என்பதை மறந்துபோனீரா பழனிசாமி.? மனு கொடுக்க வந்த பெண்ணுக்கு குழந்தையை கொடுத்த மந்திரி ‘‘சார் யார்’’ என்பது பழனிசாமிக்கு தெரியாதா? நடிகை சாந்தினி அளித்த பாலியல் புகாரில் கைதானாரே அதிமுக முன்னாள் அமைச்சர் மணிகண்டன் ‘‘சார் யார்’’ என்பது மறந்து போனதா?

நீங்கள் மறந்தது போல நடித்தாலும் தமிழ்நாட்டு மக்கள் ஒருநாளும் “அதிமுக சார் களை” மறக்க மாட்டார்கள். மொத்த பாலியல் குற்றவாளி “சார்”களின் புகழிடமாக அதிமுக வை வைத்துக் கொண்டு, பெண்கள் நலனிலும் பாதுகாப்பிலும் அக்கறை கொண்டு சிறப்பாக செயலாற்றி வரும் திராவிட மாடல் அரசை குறை கூறினால் அதை மக்களே ஏற்க மாட்டார்கள்.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மடல் ஆட்சி பெண்கள் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் எந்த அளவு முக்கியத்துவம் கொடுத்து வருகிறதோ அதே அளவு முக்கியத்துவதோடு பெண்களின் பாதுகாப்பினையும் உறுதி செய்து வருகிறது. முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் பெண்கள் பாதுகாப்பில் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது தமிழ்நாடு.

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தைப்பூசத் திருநாள்:

# பழனிக்கு சிறப்பு இரயில்களை இயக்கிடுக!

## எம்.எம்.அப்துல்லா எம்.பி. ரயில்வே வாரியத் தலைவரிடம் கோரிக்கை!

புதுடெல்லி, ஜன. 29-

“தைப்பூசத் திருநாளை முன்னிட்டு சென்னை, மற்றும் நாகர்கோவிலில் இருந்து பழனிக்கு சிறப்பு இரயில்கள் இயக்கிட வேண்டும்” நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா கோரிக்கை விடுத்துள்ளார்.

வருகிற பிப்ரவரி 5ஆம் தேதி (5.2.2025) தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு பழனிக்கு வரவிருக்கும் இலட்சக்கணக்கான பக்தர்களின் பாதுகாப்பான பயணத்தைக் கருத்தில் கொண்டு சென்னையிலிருந்தும் நாகர்கோவிலில் இருந்தும் பழனிக்கு சிறப்பு இரயில் இயக்கிட விரைந்து நடவடிக்கை எடுக்கக் கோரி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா அவர்கள் இந்திய இரயில்வே வாரியத் தலைவர் சதீஷ்குமார் அவர்களிடம் நேற்று (28.1.2025) கோரிக்கை வைத்தார்.

அதில் “தை மாதம் தமிழர்களுக்கு புனிதமான மாதமாகும். முருகனுக்கு உகந்த நாள் தைப்பூச தினம் என்பர்.தைப்பூசம் ஆண்டு தோறும் தமிழ் மாதமான தை மாதம் பௌர்ணமி நாளில் வரும். இந்நிலையில் பழனியில் உள்ள புகழ் பெற்ற பழனி முருகன் கோவிலுக்கு ஆண்டு தோறும் இலட்சக்கணக்கான பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்துவதற்காக வந்து வழிபாடு நடத்துவது



வழக்கம். இந்தக் காலகட்டத்தில் பழனிக்கு வருவதற்கும், அங்கிருந்து செல்வதற்கும் போக்குவரத்து தேவை கணிசமாக அதிகரிக்கிறது.

சென்னை மற்றும் நாகர்கோவில் உட்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் ஏராளமான பக்தர்களின் பாதுகாப்பான பயணத்தைக் கருத்தில் கொண்டு போதுமான இரயில் சேவைகளை உறுதி செய்வது மிகவும் அவசியம்.

எனவே, இந்த முக்கியமான நாளில் பக்தர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சிறப்பு இரயில்களை இயக்கி, தைப்பூசத் திருவிழாவில் கலந்துகொள்ளும் பக்தர்களுக்கு சுமூகமான மற்றும் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்ய வேண்டும்” என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

# இளையான்குடி மேலத்துறையூரில் கிராம சபைக் கூட்டம்!

## தமிழரசி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சிவகங்கை, ஜன. 29 -

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஒன்றியம் மேல துறையூரில் குடியரசு தினத்தன்று கிராம சபைக் கூட்டம் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ தலைமையில் ஒன்றிய ஆணையாளர்கள் விஜய குமார் முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

ஊராட்சி செயலாளர் பழனி வரவேற்று பேசினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ சுப. மதியரசன் உதவி செயற்பொறையாளர் கவிதா, உதவி வேளாண்மை இயக்குனர் மு. தங்கப்பாண்டி , வட்டார சுகாதார அமைப்பாளர் தமிழ்ச்செல்வி, வினோத்குமார், மனோஜ் குமார், முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர்சுப.தமிழரசன் , தகவல் தொழில் நுட்ப அணி கண்ணன் , முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் முருகேசன், முத்துராமலிங்கம் , பெரியசாமி ,மற்றும் ஆசிரியர்ரத்தினம், முருகேசன் , சுரேஷ் , ராஜாங்கம், தினகரன், அழகர், கண்ணன் உட்பட கிராம மக்கள் கலந்து கொண்டார்கள் .

முன்னதாககாரைக்குளம் ஊராட்சி பொன்னியேந்தல் கிராமத்தில் அயோத்தி தாசர் நிதியிலிருந்து ரூபாய் 44 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள சமூதாய கூடதிட்ட பணிகளை திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.



சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தலைமையில் ஃபெஞ்சல் புயல் தொடர்பாக பேரிடருக்கு பிந்தைய நிரந்தர சீரமைப்புக்கான மதிப்பீடு குறித்து ஆய்வு (Post Disaster Needs Assessment) மேற்கொள்ள அமைக்கப்பட்டுள்ள குழுவுடன் ஆலோசனைக் கூட்டம் நேற்று (27.01.2025) நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, பேரிடர் மேலாண்மை இயக்குநர் மோகனச்சந்திரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மதுரை அவனியாபுரம் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர்

# வழக்கறிஞர் கே.மணிசேகரன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, ஜன.29

மதுரை தெற்கு மாவட்டம் அவனியாபுரம் கிழக்குப் பகுதிச் செயலாளர் வழக்கறிஞர் கே.மணிசேகரன் மறைவு செய்தி அறிந்து கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

மதுரை மாநகர் மாவட்டத்தில் மாணவப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றி, வட்டக் கழகச் செயலாளராகவும், தொடர்ந்து தற்போது அவனியாபுரம் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து வந்த வழக்கறிஞர் கே.மணிசேகரன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.


அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தார்க்கும் – மதுரை மாநகர் மாவட்ட கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# இரா. வெற்றிகொண்டான்

### சனவரி 29 (2011)



பேரறிஞர் அண்ணாவின் தென்றல் நடை மேடைப் பேச்சாலும் – தலைவர் கலைஞர் அவர்களின் கனித்தமிழ்ப் பேச்சாலும் ஈர்க்கப்பட்டு, தனது இளம் வயதிலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டவர்.

தலைவர் உடன்பிறப்புகளுக்கு எழுதிவரும் கடிதங்களால் உந்தப்பட்டு எழுதும் ஆற்றல்பெற்று கட்டுரையாளராகவும் – “பொழுது விடியும்” எனும் நாடகத்தை எழுதி, இவரே நடித்தும் – ‘கண்ணியம்’எனும் ஏட்டின் துணை ஆசிரியராகப் பணிபுரிந்தும் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர்.

கழகம், மக்களுக்காக நடத்திய அறப்போராட்டங்கள் பலவற்றில் பங்கு கொண்டு பலமுறை கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். குறிப்பாக நெருக்கடிகால ‘மிசா’ சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

கழக தீர்மானக்குழுவின் செயலாளராகவும் – தலைசிறந்த முன்னோடிப் பேச்சாளராகவும், தமிழகத்தின் பட்டிதொட்டியெல்லாம் கழகக் கருத்துக்களையும், தலைவரின் எண்ணங்களையும் பாமர மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் பரப்பி வந்தவரும் – தலைவர் கலைஞரின் இதயத்தில் நீக்கமற நிறைந்திருந்தவரும் – கழகத் தொண்டர்களின் மனத்திரையில் மறக்க முடியாதவருமான இவரது மறைவு குறித்து தலைவர் கலைஞர் அவர்கள் துயரத்தால் கண்களைக் கண்ணீர்க் குளமாக்கிக் கொண்டு எழுதிய வைர வரிகள்; “இருக்கின்றாய் நீ என்றைக்கும் கழகத்தோடு – அண்ணாவோடு –அவர்தம் தம்பியராம் எங்களோடு!”.

தலைமைக் கழகம்
தி.மு.க.